بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

# ஜும்ஆ உரை

## தவ்ஹீத் & ஷிர்க்

**கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் நிகழ்த்தியஜும்ஆ உரை**



இந்த நூற்றாண்டின்
முஜத்தித் மற்றும் மஸீஹ்

Tamil Translation of Friday Sermon by Khalifatullah Hazrat Munir Ahmad Azim dated on:

18 ஷவ்வால் 1443 ஹிஜ்ரி
(20 மே 2022)

**Jamaat Ul Sahih Al Islam**

Dhawa Department, Tamilnadu.

GOVT.REG NO 11/2018

Cell Number : 9486157897

E.Mail : Jusai.tn@gmail.com

بسم الله الرحمن الرحيم

உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லீம்களுக்கும், தமது ஸஹாபிகளுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு கலீஃபத்துல்லாஹ்(அய்) அவர்கள் தஷஹுது, தாவூது மற்றும் சூரா அல்-ஃபாத்திஹா ஆகியவற்றை ஒதியபிறகு, தவ்ஹீத் & ஷிர்க் என்ற தலைப்பில் ஜும்ஆ பேருரை நிகழ்த்தினார்கள்.

தன்னைப் படைத்து பரிபாலித்து, பக்குவபடுத்துபவனாகிய இறைவன் அல்லாஹ் என்றும், அவனே தனக்கு எந்த இணை, துணை இல்லாத ஒரே உண்மையான இறைவன் என்றும், அதனால், அவன் மட்டுமே வணங்குவதற்குத் தகுதியான உண்மையான இறைவனென்றும், மனிதன் அறிந்திருந்தால், அத்துடன் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மனித குலத்திற்கு அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர் என்பதையும் மனிதன் அறிந்திருந்தால், அவர் இஸ்லாமிய மார்க்கத்தைப் பற்றி அறிந்து கொள்ளாதவரை, அதில் நம்பிக்கை கொள்ளாதவரை, அதன் கட்டளைகளின்படி நடந்து கொள்ளாதவரையில் அல்லாஹ் மற்றும் அவனது இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) மீதான அவரது நம்பிக்கையானது முழுமையடையாது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். மனித குலத்திற்கு அல்லாஹ் (துபாரக்) அங்கீகரித்த உண்மையான மார்க்கம் இஸ்லாம் என்பதே இதற்குக் காரணமாகும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முன், தனது தூதர்கள் அனைவருக்கும் இஸ்லாத்தை பின்பற்றுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான், மேலும் நபி(ஸல்) அவர்களை இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வதற்காகவும், அதன் கட்டளைகளின்படி நடந்து கொள்ளுமாறு மக்களைக் கட்டளையிடுவதற்காகவும் அனைத்து தீர்க்கதரிசிகளின் முத்திரையாக அனுப்பினான் .

இஸ்லாம் என்றால் என்ன?

அடுத்து, இஸ்லாம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இஸ்லாத்தை பின்வருமாறு வரையறுத்துள்ளார்கள்: "இஸ்லாம் என்பது அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அவனுடைய தூதர் என்றும் அவனுடைய அடியார் என்றும் சாட்சியளிப்பதுமாகும். மேலும் தொழுகைகளை நிறை

வேற்றுவதும், ஏழை வரி(ஜகாத்) செலுத்துவதும், ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும், மக்காவில் உள்ள புனித பள்ளிக்கு செல்ல தகுதி படைத்தவராக இருந்தால் புனிதப் பயணம் மேற்கொள்வதுமாகும் ".

இஸ்லாம் மனித குலத்திற்கான உலகளாவிய உண்மையான மார்க்கமாக இருக்கிறது. அல்லாஹ் திருக்குர்ஆனில்

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ ۗ

**"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (உண்மையான) மார்க்கம் இஸ்லாமாகும்" என்று கூறியுள்ளான்.** (ஆல இம்ரான் 3 : 20)

அல்லாஹ்வின் அனைத்துத் தூதர்களும், முஹம்மது நபி (ஸல்) அவர் களுக்கு முன் அனுப்பப்பட்டவர்களும் கூட இஸ்லாத்தை தனதாக்கிக் கொண்டு, அதை வெளிப்படுத்தி, அதன்படி நடந்து கொண்டார்கள்.

وَمَن يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ

குர்ஆனும் கூட (இவ்வாறு) கூறுகிறது

**"இஸ்லாம் அல்லாத வேறு(ஏதாவது) மார்க்கத்தை(மேற்கொள்ள) விரும்பு பவனிடமிருந்து(அது) ஒருபோதும் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது (என்பதை யும்) அவன் மறுமையில் இழப்பிற்குரியோனுமாவான்(என்பதையும் அவன் நினைவில் கொள்ளட்டும்).** (ஆல இம்ரான் 3 : 86)

இந்த இரண்டு திருக் குர்ஆனின் வசனங்களின் அடிப்படையில், இஸ்லாம் மட்டுமே அல்லாஹ்வின் உண்மையான மார்க்கம் ஆகும். மறுமை நாளில் வேறு எந்த மார்க்கமும் ஏற்றுக்கொள்ளப்படாது.

ஆகவே, முஸ்லிம்கள் [அதாவது அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணி பவர்கள்] மட்டுமே மறு உலகில் மகிழ்ச்சியைப் பெறுவார்கள்.

இஸ்லாம் அல்லாத வேறு மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட நிலையில் மரணிப் பவர்கள் மறுமையில் நஷ்டமடைந்தவர்களாகவும், நரக நெருப்பில் வேதனைப்படுபவர்களாகவும் இருப்பார்கள். (நஊதுபில்லாஹ்)

முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முன் அனுப்பப்பட்டிருந்த அனைத்து நபிமார்களும் எதனால் தங்களை முஸ்லிம்கள் என்று அறிவித்து அல்லாஹ் விற்கு அடிபணிந்தவர்களாக இருந்தார்கள் என்பதை இது விளக்குகிறது.

இஸ்லாத்தை நிராகரிக்கும் எவரிடமிருந்தும் தாங்கள் விடுபட்டவர்கள் என்று அறிவித்தார்கள்.

எனவே, இரட்சிப்பிற்க்காக பாடுபடக் கூடிய, இன்னும் மறுமையில் மகிழ்ச் சியைப் பெற விரும்பும் ஒரு யூதரோ அல்லது கிறிஸ்தவரோ, இஸ்லாத்தைத் தழுவி இஸ்லாத்தின் திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும்.

யூதரோ அல்லது கிறிஸ்தவரோ அவ்வாறு ஏற்றுக் கொள்பவராகிவிடுகின்ற அதே நேரத்தில், இயேசு மற்றும் மூஸா(அலை) ஆகியோரின் உண்மையான சீடர்களாகவும் ஆகிவிடுகிறார்கள் ஏனெனில், ஏற்கனவே விவரித்துள்ளபடி, மூஸா, இயேசு, நபி(ஸல்) இன்னும் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட அனைத்து அல்லாஹ்வின் தூதர்களும் முஸ்லிம்களாகவும், அல்லாஹ்வின் உண்மையான மார்க்கமாகிய இஸ்லாத்தின் பக்கம் அழைப் பவர்களாகவுமே இருந்தார்கள். முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் அல்லது அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்திக்குப் பிறகு தோன்றியவர் கள்தான், நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நம்பிக்கை கொண்டு, அவர்களைப் பின்பற்றி நடந்து, அல்லாஹ் கட்டளையிட்டதை மேற்கொண்டு, அவன் தடை செய்துள்ளதைத் தவிர்த்து கொண்டால் அன்றி தன்னை முஸ்லிம் என்று வாதிக்க இயலாது. அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ

**"நீர் கூறுவீராக, (மக்களே) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது தான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை மன்னிக்கவும் செய்வான், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் அருள் செய்பவனு மாவான்".** (திருக்குர்ஆன் 3 : 32)

இந்த வசனத்தில், அல்லாஹ்வை நேசிப்பதாக உரிமை கோருபவர்களுக்கு அல்லாஹ் தனது தூதர் முஹம்மது(ஸல்) அவர்களிடம் கட்டளையிடுகிறான்: "நீங்கள் அல்லாஹ்வை உண்மையாக நேசித்தால், என்னைப் பின்பற்றுங் கள், (அப்போது) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான்."

நீங்கள் அவனுடைய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களைப் பின்பற்றாதவரை அல்லாஹ் உங்களை ஒருபோதும் நேசிக்கவும் மாட்டான். உங்களது பாவங்களை மன்னிக்கவும் மாட்டான்.

முழு மனித குலத்திற்கும் முழுமை பொருந்தியதும், சகிப்புத்தன்மை வாய்ந்ததுமாகிய இஸ்லாத்தை பரப்புவதற்காக அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களை அனுப்பினான். அல்லாஹ் திருக்குர்ஆனில் இஸ்லாத்திற்கு பரிபூரணத்துவத்தை வழங்கி இருப்பதாகவும், அதை மனித குலத்தின் மார்க்கமாக அங்கீகரித்திருப்பதாகவும் கூறுகிறான்.

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا

**"இன்றைய தினம் நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரண மாக்கி விட்டேன், என் அருட்கொடையை உங்கள் மீது நிறைவு செய்து விட்டேன், மேலும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்கள் மார்க்கமாக தேர்ந் தெடுத்துள்ளேன்."** (அல் மாயிதா 5:4)

இந்த திருக்குர்ஆன் வசனம் நபிகள் நாயகம் முஹம்மது(ஸல்) அவர்களின் இறுதி புனிதயாத்திரையின் போது அரஃபாத் மைதானத்தில் நின்று கொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து, அவனுடைய உதவிக்கு நன்றி செலுத்திக் கொண்டிருக்கும் போது வெளிப்படுத்தப்பட்டது. குர்ஆன் முழுமைப்படுத்தப்பட்டதன் மூலம் அவன் தனது தூதருக்கு அவன் செய்த உதவிகளை பூர்த்தி செய்தான். மேலும், இஸ்லாம் அதனைப் பின்பற்று பவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதன் மூலம் இஸ்லாம் அதன் படிப்படியான முன்னேற்றத்தைத் தொடங்கி இருந்தது. [அல்ஹம்து லில்லாஹ்].

அது அதாவது இஸ்லாம் எல்லா காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லா நாடுகளிலும் உள்ள அனைத்து மனித குலத்திற்குமான சரியான, விரிவான, புரிந்து கொள்ளும் திறனுள்ள, மற்றும் பொருத்தமான மார்க்கம் என்பதனால் அனைத்து மனித குலத்தையும் அதன் பக்கம் அழைக்க வேண்டும் என்பதற்காக இந்த இஸ்லாம் முஹம்மது முஸ்தஃபா(ஸல்) அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது என்பதையும் இந்த வசனம் சுட்டிக் காட்டுகிறது.

அறிவு, சகிப்புத்தன்மை, நீதி மற்றும் நன்மை ஆகியவற்றின் தனிச் சிறப்புகளால் இஸ்லாம் அமைந்துள்ளது என்ற உண்மையே இதற்குக் காரணமாகும். இது மனிதனை அவனது வாழ்வின் எல்லா நிலையிலும் வழிநடத்தக் கூடிய தெளிவான, முழு நிறைவான மற்றும் நேரான வழி முறையைக் கொண்டுள்ளது. இஸ்லாம் ஒரு நம்பிக்கை மட்டுமல்ல, மாறாக, அதற்கு அதன் சொந்த தனித்துவம் மிக்க ஆட்சி, நீதி, அரசியல் அமைப்பு,

சமூக விவகாரங்கள், பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படைகளையும் கொண்டுள்ளது. மேலும் மனிதகுலம் தனது உலக வாழ்வில் செழிப்பையும், மரணத்திற்கு பிறகு வரவிருக்கும் வாழ்வில் மகிழ்ச்சியையும் அடைவதற்கு தேவையான எல்லா விதமான பயனுள்ள அறிவும் அதில் அடங்கியுள்ளது.

**இஸ்லாத்தின் தூண்கள்**

இஸ்லாம் விவாதிக்கப்படும் போதெல்லாம், அது அமைந்து நிற்க்கும் அதன் தூண்களைப் பற்றியும் நாம் பேசுவது வழக்கமாகும்.இஸ்லாம் பின்வரும் ஐந்து விதிகளை அடிப்படையாகக் கொண்டது. இந்த ஐந்து அடிப்படை விதிகளை ஏற்று, அவற்றை உண்மையாக கடைபிடிக்காத வரை யாரும் தன்னை முஸ்லிம் என்று கூறிக்கொள்ள முடியாது.

1.வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிரவேறு யாருமில்லை என்றும், முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார் கள் என்றும் சாட்சியம் அளிப்பது.
2.கட்டாய தொழுகைகளை முறையாகவும், பரிபூரணமாகவும் நிறை வேற்றுதல்.
3. ஜகாத் அதாவது கட்டாய ஏழை-வரியை செலுத்துதல்.
4. ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது.
5. ஹஜ்ஜை மேற்கொள்வதற்கான தகுதியும், அதை நிறைவேற்றும் வசதியும் ஒருவருக்கு இருக்கும் என்றால் அவர் ஹஜ் செய்ய வேண்டும்.

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் முஸ்தபா(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் சாட்சிய மளித்தல் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட அர்த்தம் உள்ளது, அதை ஒரு முஸ்லீம் அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், அதனை நேர்மையுடன் நடைமுறை படுத்தவும் வேண்டும். இந்தச் சாட்சியத்தை அதாவது ஷஹாதாவை அதன் அர்த்தம் தெரியாமலோ அல்லது தனது நடத்தையில் அதனுடன் அதாவது அந்த சாட்சியத்துடன் தன்னைப் பிணைத்துக் கொள்ளாமலோ அதனை வெறுமனே கூறுபவர் அதிலிருந்து எந்த பயனையும் பெற மாட்டார்.

பூமியிலோ அல்லது வானங்களிலோ வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதே இந்தச் சாட்சியத்தின் அர்த்தம் ஆகும். ஒரே உண்மையான இறைவன் அல்லாஹ் ஆவான். மற்ற எல்லா தெய்வங்களும், அவை எதுவாக இருந்தாலும் சரி, அவை எல்லாம் பொய்யானவை ஆகும்.

ஆதலால், எவரேனும் அல்லாஹ்வைத்தவிர அல்லது அல்லாஹ்வுடன் சேர்த்து வேறு எந்த தெய்வத்தை வணங்கினாலும் சரி, இந்த தெய்வம் அல்லாஹ் விடம் அவருக்கு பரிந்துரை செய்யக் கூடியதாக இருக்கும் என்ற சாக்குப் போக்கின் கீழ் அவர் ஒரு தீர்க்கதரிசி, துறவி அல்லது புனிதமான மனித ரையே வணங்கினாலும்கூட அவர் ஒரு நம்பிக்கையற்றவரும், இணை வைப்பவரும் ஆவார்.

அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எந்த நிராகரிப்பாளர்களுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டத்தை மேற்கொண்டார்களோ, (அவர்கள்) தங்களின் நபிமார்களையும், இறையச்சம் கொண்ட மனிதர்களையும் வழி படுவதை நியாயப்படுத்த இந்தத் தவறான சாக்குப்போக்கை பயன்படுத்தி னார்கள். அல்லாஹ்வின் இணக்கத்தைப் பெற முயல்வதும், அல்லது அவனிடம் உதவி கேட்பதும் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை வணங்கு வதன் மூலம் அடைய முடியாது. மாறாக, அல்லாஹ்வுக்கு மட்டுமே சேவை செய்வதன் மூலமும் அவனது பெயர்கள் மற்றும் பண்புகளால் அவனை மகிமைப்படுத்துவதன் மூலமும் நாம் செய்ய வேண்டும் என்று அவன் நமக்குக் கட்டளையிட்ட நற்செயல்களான தொழுகை, நோன்பு, அவனது வழியில் போர் புரிதல், புனித பயணம், பெற்றோரிடம் அன்புடன் நடத்தல் போன்றவற்றை மேற்கொள்வதன் மூலமும் மட்டுமே அதனை அடைய முடியும்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து தூண் களின் மேல் எழுப்பப்பட்டுள்ளது; ஒன்று அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்றும் சாட்சியமளித்தல், இரண்டு தொழுகையை நிறைவேற்றுதல், மூன்று ஜகாத் கொடுத்தல், நான்கு ரமலான் மாதம் நோன்பு நோற்றல், மற்றும் ஐந்து புனித இல்லத்திற்கு புனிதப் பயணம் மேற்கொள்ளுதல் ஆகியன.

வணக்க வழிபாடுகள் வெவ்வேறு வடிவங்களை கொண்டிருக்கின்றன, அவற்றில் ஒன்று பிரார்த்தனை ஆகும், அதன் பொருள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் வழங்க முடியாத ஒன்றைக் கேட்பது ஆகும். மழை பொழிதல், ஒரு நோயாளி குணமடைதல், துரதிர்ஷ்டங்களிலிருந்து விடுபடுதல், நரக நெருப்பிலிருந்து இரட்சிப்பையும் சுவர்கத்தில் நுழை வதைக் கோருதல், முதலிய இந்த எல்லா நிகழ்வுகளிலும், இன்னும் பிற ஒத்த நிகழ்வுகளிலும் ஒருவர் அல்லாஹ்விடம் மட்டுமே அத்தகைய பாக்கியங்களை வழங்கும்படிக் கேட்க வேண்டும்.

எவன் அழியக் கூடிய மனிதனிடம் இப்படிப்பட்டவற்றை தனக்கு வழங்கும் படி கேட்கின்றானோ அவன் உண்மையில் இந்த மனிதனை வணங்குகிறான். அல்லாஹ்வின் அடியார்களுக்கு எது தேவையாக இருந்தாலும் அவர்கள் அல்லாஹ்விடம் மட்டும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று அல்லாஹ் தன் அடியார்களுக்கு கட்டளையிட்டுள்ளான். உங்கள் இறைவன் கூறுகின்றான்:-

**"என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள்; நான் உங்(கள் பிரார்த்தனை) களுக்கு பதிலளிக்கிறேன்; எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் சிறுமையடைந்த வர்களாக நரகத் தில் நுழைவார்கள்."** (அல் முஹ்மின் 40:61)

சிலை வணங்கிகள் பிரார்த்திக்கும் அழியக் கூடிய மனிதர்கள் ஆற்றலை இழந்தவர்கள் ஆவார்கள். அவர்களால் ஒருபோதும் எவருக்கும் எந்த தீங்கும் விளைக்கவோ அல்லது எந்த பலனையும் கொண்டுவரவோ முடியாது என்று அல்லாஹ் நமக்கு அறிவுறுத்தி உள்ளான்.

**அவனையன்றி (வேறு தெய்வங்கள் இருப்பதாக) நீங்கள் எண்ணிக் கொண்டிருப்பவர்களை அழைத்துப்பாருங்கள்; அவர்கள் உங்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்கவோ அல்லது திருப்பிவிடவோ சக்தி பெறவில்லை (என்பதை அறிவீர்கள்).** (பனீ இஸ்ராயீல் 17:57)

குர்ஆன் மேலும் கூறுகிறது:

**"அன்றியும், நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ் அவன ஒருவனுக்காகவே இருக்கின்றன, எனவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் (சேர்த்து வேறு) எவரையும் நீங்கள் பிரார்த்திக்காதீர்கள்.** (அல் ஜின் 72:19)

(குர்பானி) கொடுத்தல் மற்றும் புனிதப்படுத்தப்பட்ட தியாகங்கள் அல்லாஹ்வுக்காக மட்டுமே அர்ப்பணிக்கப்பட வேண்டிய செயல்கள் ஆகும். இறந்து போன நல்லடியார்களுக்காக, ஜின்களுக்காக அல்லது அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்காகவும் குர்பானி கொடுப்பவர் அல்லது உறுதிமொழி அளிப்பவர் அல்லாஹ்வால் சபிக்கப்பட்ட ஓர் இணை வைப்பாளர் ஆவார். குர்ஆன் மேலும் கூறுகிறது:

**நீர் கூறும்; "மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். அவனுக்கு யாதோர் இணையுமில்லை - இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன் -**

**(அவனுக்கு) வழிப்பட்டவர்களில் - முஸ்லிம்களில் - நான் முதன்மை யானவன் (என்றும் கூறும்).** ( அல் அன்ஆம் 6:163-164 ).

அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்காவது பலி கொடுப்பவரை அல்லாஹ் சபிப்பானாக!. நான் இந்த தேர்வில் தேர்ச்சி பெற்றாலோ அல்லது நோயிலி ருந்து விடுபட்டாலோ இந்த தெய்வத்திற்கு நான் ஒரு பலி கொடுப்பதாக நேர்த்திக் கடன் செய்கிறேன் என்று ஒரு நபர் கூறினால் இந்த வகையான உறுதிமொழி நிச்சயமாக உருவ வழிபாட்டின் ஒரு வடிவமாகும். ஏனெனில் நேர்த்திக் கடன் என்பது அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட வேண்டும். மேலும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் அர்பணிக்கப்பட கூடாது. நான் வெற்றி பெற்றாலோ அல்லது நோயிலிருந்து விடுபட்டாலோ நான் அல்லாஹ்வுக்கு பலி கொடுப்பதாக உறுதி அளிக்கிறேன் அல்லது நான் இந்தத் தொகையை ஏழைகளுக்குச் செலுத்துவேன், அல்லது வறியவர் களுக்குக் இன்னதின்னதை வழங்குவேன் என்று நான் அல்லாஹ்விடம் உறுதியளிக்கிறேன் என்று கூறுவதே இதுபோன்ற சந்தர்ப்பங்களில் சரியான உறுதி மொழியாகும்.

எனவே, எந்த நேரத்திலும் நாம் அல்லாஹ்வை வணங்குவதில் பொய் கடவுள்களை எடுத்துக் கொள்ளவோ அல்லது இந்த பொய் தெய்வங்களைக் கொண்டு சத்தியம் செய்யவோ கூடாது. இது போன்ற பொருட்களுக்கோ அல்லது மனிதர்களுக்கோ எந்த ஆற்றலும் இல்லை. மேலும் அல்லாஹ் ஒருவனே நம்மை படைத்துள்ளபோது நாம் அவைகளிடம் திரும்புவதை அல்லாஹ் வெறுக்கிறான்.

அல்லாஹ் நம்மிடமிருந்து ஒன்றே ஒன்றை மட்டுமே விரும்புகிறான். (அது) நமக்கு மிகவும் எளிமையான ஒன்றாகும். ஆனால், மனிதனோ அதனை நிறைவேற்றுவதை மிகவும் கடினமாக காண்கிறான். அல்லாஹ் அவனை மட்டுமே வழிபட வேண்டும் என்று கூறியுள்ளான். ஆனால் மனிதன் இந்த அடிப்படையான இறை அறிவுறுத்தலை இன்னும் பின்பற்றாமல் அல்லாஹ் வுடன் மற்றவர்களை இணையாக்குகிறான். அல்லாஹ் கோபமாக இருக்கக் கூடாது என்று நீங்கள் எவ்வாறு எதிர்பார்க்கின்றீர்கள்? அவன் வித்ர்- இரட்டையல்லாதவன் - ஒரே ஒருவன் - தனித்துவமானவன், மேலும், அவனது அடியார்கள் தம்மிடம் மட்டுமே திரும்புவதை அவன் விரும்பு கிறான். ஆனால் அது விஷயமல்ல. இந்த உலகத்தின் ஈர்ப்புகளைக் கொண்டு ஷைத்தான் அவர்களை அவனிடம் மிகவும் வசப்படுத்தியதால் அவர்கள் குருடர்களாகிவிட்டனர். ஆகவே அல்லாஹ்வின் ஏகத்துவத்தை அவர்கள்

காண மாட்டார்கள்.

.இன்ஷா அல்லாஹ், நான் இந்த சொற்பொழிவை அடுத்த வாரம் தொடர்கிறேன். நம்மால் இதனைக் குறித்து உரையாடி முடிக்க முடியாத அளவிலான மிகவும் விரிவான ஒரு தலைப்பாகும். அல்லாஹ், நம்முடைய அதிகப்படியான வரம்பு மீறுதல்களுக்காக அவன் நம்மிடம் கருணை காட்டுகிறான். நம்மை மன்னிக்கவும் செய்கிறான். ஆனால், அவன் ஒருபோதும் மன்னிக்காத மிகப்பெரிய பாவம் ஷிர்க் (இணை வைத்தல்) ஆகும். எதுவரை ஒரு நபர் ஹிதாயத்தை [வழிகாட்டுதலை] பெற்று அல்லாஹ்வின் ஏகத்துவத்தை (தவ்ஹீதை) ஏற்றுக்கொண்டு அல்லாஹ்வுக்கு அடிபணிந்து இஸ்லாத்தை முழுமையாக்குகின்றாறோ அப்போது அவருடைய கடந்தகால பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (அந்நிலையில்) அது அவர் இஸ்லாத்தில் ஒரு புதிய அங்கமாகவோ அல்லது ஒரு மனிதனாகவோ புதியதொரு பிறவியை எடுப்பது போன்றதாகும். (அப்போது) அவர் அல்லாஹ்வுக்கு மட்டுமே அடிபணிகிறார்.

எனது அன்பிற்குரிய ஸஹாபிகளே, முஸ்லீம் பெருமக்களே, மற்றும் ஒட்டு மொத்த மனித சமுதாயமே மிகவும் பணிவுடனும், அமைதியுடனும் இஸ்லாத்தில் நுழையுங்கள். உங்கள் செயல்களால் இந்த அழகிய மார்க்கத்தின் மாண்பை இழக்க செய்து விடாதீர்கள். மேலும் உங்கள் செயல்களை உங்கள் உள்ளத்தின் இறையச்சத்துடன் செய்யுங்கள். இவ்வாறு இறையச்சம் எனும் தக்வாவுடன் செய்யும் போது தீமை கலவாத நன்மையான செயல்களை செய்யும் ஆற்றல் உங்களுக்கு கிடைக்கின்றது.

இஸ்லாம் ஒரு பரிபூரண மற்றும் சிறந்த வாழ்வியல் தத்துவமாகும். இந்த மார்க்கம் நம்மை சீர்படுத்துவதுடன், ஒட்டு மொத்த சமுதாயத்தையும் இறைவன் என்ன நாடுகிறானோ அதைநோக்கி வழி நடத்துகிறது. ஏனென்றால் இந்த மார்க்கத்தில் இறைவனுடைய கட்டளைகளுக்கு முற்றிலும் கட்டுப்படுவதன் மூலம், நமது வாழ்வை அர்ப்பணித்து இந்த மார்க்கத்தை உலகத்தில் மிளிர செய்கின்றோம். மேலும் இறைவனுடன் வேறு எதையும் இணைவைக்காதீர்கள். அல்லாஹ் ஒருவனே உண்மையான இறைவனாவான்

இஸ்லாம் என்னும் மார்க்கத்தின் பாதையை ஞானம், கருணை மற்றும் இறையச்சத்துடன் பயணம் செய்யுங்கள். மேலும் இறையச்சம் மற்றும் அவனது அன்பின் மூலம் அவனது பாதுகாப்பு என்னும் கதவை திறந்து உங்கள் வாழ்வின் அனைத்து ஷைத்தானிய ஈர்ப்பிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இன்னும் இஸ்லாத்தை உங்களிடம் ஆணித்தரமாக -

வேரூன்ற செய்து பிறருக்கு முன், அழகிய முன்னுதாரத்தை வெளிப்படுத்துங்கள். இதற்காக உங்களின் நப்ஸ்சுடனும் சண்டையிடுங்கள். மேலும் நீங்கள் இறைவனுக்காவும் அவனது திருப்தியை நாடி சண்டையிடுங்கள். இன்னும் எப்போதும் இறைவனையே முதன்மை படுத்துங்கள். இதன் மூலம் பெயரளவில் முஸ்லிம்களாக இருக்காமல் உண்மையான முஸ்லீம் களாகி விடுங்கள். அப்போது மற்றவர்கள் மிகுந்த மதிப்பையும், போற்று தலையும் உங்கள் மீது கொள்வார்கள். ஏனென்றால் நீங்கள் உண்மையான முஸ்லீம்களாக ஆகும் போது அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் உங்கள் மீது திருப்தி கொள்கின்றான். இன்னும் இறைவன் உங்களை நேசித்தால் அவன் உங்களுக்காக அவனது எல்லையற்ற கருணையை உங்கள்மீது இறக்கி, உங்களுக்காக அவனது சொர்க்கத்தின் வாசலை திறப்பான். ஏனென் றால் நமது இறைவனின் உன்னதமான கருணை எல்லையற்றதாகும்.

எனவே, எனது அன்பிற்குரியவர்களே... நீங்கள் அனைவரும் உண்மையான முஸ்லீம் ஆகிவிடுங்கள். இன்னும் அல்லாஹ்வின் கட்டளைகளை கேட்டு அதை நடைமுறை படுத்துங்கள். ஒருபோதும் சாத்தானின் பித்ததுகளிலும், இணைவைப்பதிலும் வீழ்ந்து ஷிர்கிற்கு அடிமையாகிவிடாதீர்கள். இன்னும் அல்லாஹ்வின் கட்டளைகளை கேட்டு அதை நடைமுறை படுத்துங்கள். மேலும் உங்களின் ருஹுவை அல்லாஹ்விற்கு எதிரான பொய்யிலிருந்து பாதுகாத்து அவனது உண்மையின் பக்கம் அழைத்துச்செல்லுங்கள்.

வாருங்கள் இறைவனின் பேரருளின் பக்கம். மேலும் ஷைத்தானின் பக்கம் சாய்வதிலிருந்து விலகுவதன் மூலம் உண்மையான இரட்சிப்பை அடையுங் கள் இன்ஷாஅல்லாஹ். மேலும் அல்லாஹ் உங்களது தேடலை பூர்த்தி செய்து, அவனது திருப்தியையும் உண்மையான தவ்ஹீதையும் உணர அருள்புரிவானாக... இதன் மூலம் உங்களின் ஒவ்வொரு நாளும் முழுமை யான இஸ்லாத்தில் வாழ செய்வானாக. இன்ஷாஅல்லாஹ் ஆமீன்.

..........................................................

## கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள்!

நீங்கள் அவனுடைய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களைப் பின்பற்றாதவரை அல்லாஹ் உங்களை ஒருபோதும் நேசிக்கவும் மாட்டான். உங்களது பாவங்களை மன்னிக்கவும் மாட்டான்.

முழு மனித குலத்திற்கும் முழுமை பொருந்தியதும், சகிப்புத்தன்மை வாய்ந்ததுமாகிய இஸ்லாத்தை பரப்புவதற்காக அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களை அனுப்பினான். அல்லாஹ் திருக்குர்ஆனில் இஸ்லாத்திற்கு பரிபூரணத்துவத்தை வழங்கி இருப்பதாகவும், அதை மனித குலத்தின் மார்க்கமாக அங்கீகரித்திருப்பதாகவும் கூறுகிறான்.

**"இன்றைய தினம் நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரண மாக்கி விட்டேன், என் அருட்கொடையை உங்கள் மீது நிறைவு செய்து விட்டேன், மேலும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்கள் மார்க்கமாக தேர்ந் தெடுத்துள்ளேன்." (அல் மாயிதா 5:4)**